**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 6/2020 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. அழகர் | CASTE | : | |
| S/O | A. ராஜா | RELIGION | : | இந்து |
| VILLAGE | ஜெய்கிந்த்புரம் | CALLING | : | |
| TALUK | மதுரை | AGE | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.11.2025**

**குறுக்கு விசாரணை**

1. நான் எதுவும் படிக்கவில்லை. வேலை எதுவும் செய்யவில்லை. நான் சாட்சி அளிக்க வருமாறு அழைப்பாணை எதுவும் வரவில்லை, வாதி அழைத்ததால் வந்தேன். கோயில் இடத்தைக்கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வெண்ணிமுத்து அய்யனார் கோயில் 2ம் பூசாரி என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச்சொத்தை 1993ல் கிரையம் பெற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2015ல் வழக்குச்சொத்தை கிரையம் பெற்ற முன்பாத்தியஸ்தரின் பட்டா மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.1 பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சொத்தின் விஸ்தீரணம் 0.0066 சதுரமீட்டர் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதன் நீள அகலமும் நான்குமால் எல்கைகளும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கில் உள்ள கோயிலுக்கு மேற்கு மற்றும் வடக்கு பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரியல்ல, மேற்குப்பக்கம் கோயில் இடம் உள்ளது. வழக்குச்சொத்தை கிரையம் வாங்கியபின் அதை சர்வே செய்யவில்லை. நான் கிரையம் வாங்கிய இடத்தைத்தவிர வேறு இடம் எங்களுக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல.

3. வழக்குச்சொத்தான கோயில் என்பது மேடையும் அதன் மேல் பீடமும் மட்டும் உள்ளது, வேறு கட்டிடம் இல்லை என்றால் சரிதான், அதைத்தவிர காலியிடமும் உள்ளது. கோயிலின் மேற்குப்புறம் 1ம் பிரதிவாதியின் இடத்தை நானும் மற்ற

நபர்களும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக வாடிப்பட்டி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை 15/16 பதிவாகி நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4. நான் மதுரை ஜெய்கிந்த்புரத்தில் குடியிருக்கிறேன். வழக்கு கோயிலுக்கு எனக்கு தினமும் செல்லும் வழக்கமில்லை, மாதா மாதம் செல்வேன். 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக வாதி சொல்லிதான் எனக்குத்தெரியும் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனைக்கு நடவடிக்கை எடுத்ததாக சொல்லியுள்ளது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. மற்றவர்களுடன் சேர்ந்துதான் கொடுத்தேன்.

5. நான் சொல்வதுபோல் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் எங்கள் மீது அவர் கொடுத்த புகாருக்கு எதிராக பொய்யாக வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 8வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள சங்கதியின்போது யார் யார் சென்றோம் என்றும் எந்த நேரத்தில் நடந்தது என்றும் சம்பவம் நடைபெறாததால் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்குத்தெரியாது, அப்போது நான் அங்கு இல்லை.

6. 1ம் பிரதிவாதி அவர் இடத்தைச்சுற்றி வேலி போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பேஸ்மட்டம் மட்டும் போட்டுள்ளார். 1ம் பிரதிவாதி பசுமை இல்ல திட்டத்தின்கீழ் வீடு கட்டி முயற்சி செய்ததை நாங்கள் தடுத்துவிட்டோம். வழக்குக்கோயிலுக்கு வா.சா.ஆ.1ல் உள்ள இடத்தைத்தவிர வேறு சொத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் உள்ள இடத்தை கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்குக்கோயிலுக்கான பூசாரிகள் கோயில் இடத்தில் தங்குவார்களா என்றால் கோயிலில் தங்கமாட்டார்கள்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

/ //True copy//
Sd/– M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.